பிவா.சா.3. கி.காளிமுத்து .O.S.No.2/2009 27.02.2023

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியும். ஆங்கிலத்தில் சரியாக தெரியாது. அ.வ.எண்.2/2009ல் நான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள். இந்த வழக்கின் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அவஎண்.172/2008 நான் தாக்கல் செய்துள்ள வழக்கு என்றால் சரிதான். என்னுடைய வழக்கிற்கு நான் தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னேன். கிரைய ஒப்பந்தப்படி எனக்கு கிரையம் எழுதி கொடுக்க சொல்லி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிராதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிராதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் ஆங்கிலத்தில் எழுதி இருந்தாலும் வழக்கறிஞர் சொல்லி எனக்கு அதன் விபரங்கள் தெரியும். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி அசல் வழக்கு எண். 85/2008 வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு என் மீதும் தி. காளிமுத்து என்பவர் மீதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் அவர் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் அதன்படி கிரையம் எழுதி தரவேண்டி அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். கே.எம். பெருமாள் போட்ட வழக்குதான் முதல் வழக்கு என்றால் சரிதான். கே.எம். பெருமாள் எனக்கு 24.04.2008ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். ஆனால் அதை அவர் பெற்றுக் கொள்ளவில்லை. தி.காளிமுத்துவை எனக்கு 40ஆண்டுகளாக தெரியும். தாவா சொத்தை நான் 2001, 2002 ஆகிய தேதிகளில் இரண்டு முறை அடமானம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த அடமானம் 5 ஆண்டுகளுக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் 2006ஆம் ஆண்டு அடமான கடன் தேதி முடிந்தவுடன் பணத்தை கேட்டேன். அவர் மேலும் 5ஆண்டுகள் வைத்து கொள்ளுமாறு என்னிடம் டொசான்னார். நான் 2006 ஆண்டு அடமான கடன் தொகையை கேட்டேன் என்பது பொய் என்றாலும்

2008 ஆம் ஆண்டு கே.எம். பெருமாள் தி. காளிமுத்துவுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுதான் நான் அவரிடம் சென்று பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் எழுதும்போது சொத்தில் ஏதாவது வில்லங்கம் இருந்தால் அதை குறிப்பிட்டு தான் எழுதுவார்கள் என்றால் சரிதான். நான் கடந்த 14.04.2008 ல் ஒரு கிரைய ஒப்பந்தம் தி.காளிமுத்துவுடன் போட்டேன் என்றால் சரிதான். பொதுவாக பத்திரம் வாங்கிய தேதியில் தான் ஆவணம் எழுதுவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிவாசாஆ 15 கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ள பத்திரம் வாங்கிய தேதி 11.04.2008 என்றால் சரிதான். பிவாசாஆ 15 கிரைய ஒப்பந்தத்தை ரூ.11 லட்சம் கிரைய தொகை என்றும் ரூ.2 லட்சம் முன்தொகையாக கொடுக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது என்றால் சரிதான். நான் அடமானத்திற்காக கொடுத்ததாக சொல்லும் தொகை அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தம் 30.01.2009 ல் முடிவடைகிறது என்றால் சரிதான். அதன்பின்பு நான் தி.காளிமுத்துவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கே.எம். பெருமாள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். 04.05.2008 தேதி கே.எம் பெருமாள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். நான் அதற்கு பதில் அறிவிப்பு 15.10.2008 ல் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு அவர் அசல் வழக்கு எண். 85/2008 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு எனக்கு கே.எம்.பெருமாள் போட்ட கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போட்டது உடனே தெரிந்துதான் நான் அதிக தொகைக்கு கிரையம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி வற்புறுத்தி கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்திக்கொண்டுள்ள கிரைய ஒப்பந்தத்தில் அடமான கடன் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால் அதை அவசர அவசரமாக நானும் தி.காளிமுத்துவும் கூட்டு சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. அவ்வாறு எங்களுக்கும் கூட்டு

உள்ளது என்பதால் தான் தி.காளிமுத்துவின் மகன்களை தூண்டி ஒரு பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 16, 17,18 ஆகிய ஆவணங்களில் மொத்த ரூ.40 ஆயிரம் நான் தி. காளிமுத்துவிற்கு கொடுத்தாக உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள தேதிகளின் மேற்சொன்ன தொகை பகுதி பகுதியாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதை அந்தந்த தேதிகளில் எழுதாமல் ஏன் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டது என்றால் அதை அவர் தான் எழுதி கொடுத்தார். அந்த டைரியில் 05.05.2008 ம் தேதிய தவிர வேறு எந்த பக்கங்களிலும் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ 15, 16, 17 ஆகிய ஆவணங்களில் கிரைய ஒப்பந்தத்திற்காக அந்த தொகை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் கிரைய ஒப்பந்தத்திற்காக எடுத்துகொள்ள சொன்னார். பிவாசாஆ 3 உள்ள கையெழுத்து தி.காளிமுத்துவின் கையெழுத்துதான். பிவாசஆ 3 ஆவணத்தில் 19.12.2007 ல் ரூ.20 ஆயிரமும், 11.01.2008 ல் ரூ.20 ஆயிரமும், 03.04.2008 ல் ரூ.2 லட்சமும், பெற்றுகொண்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிசாசாஆ 3 மற்றும் 15 ல் உள்ள கையெழுத்து தி.காளிமுத்துவுடையதுதான். 2 ம் பிரதிவாதியை கே.எம். பெருமாளை எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவினர். அவருக்கு தாவா சொத்தின் அருகில் நிலம் உள்ளது என்றால் சற்று தள்ளி உள்ளது.

(குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)